DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.302/2015**

Deposition of :PW -10

| | | |
|---|---|---|
| Name | : திரு. மாதவி | Caste: |
| Husbands Name: | திரு. ராமு | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 8th day of June - 2023.

A1 and A3 to A6 Present.

**08.06.2023.**

**முதல் விசாரணை**

நான் சேலம், அரியானூர், இந்திராநகர், ஆட்டையாம்பட்டி பிரிவில் குடியிருந்து வருகிறேன். என் கணவர் ராமு ஆட்டையாம்பட்டி பிரிவு ரோட்டில், பழைய செக்போஸ்ட் அருகில் குமார் ஹோட்டல் என்ற பெயரில் உணவகம் நடத்தி வந்தார். நான் சத்துணவு அமைப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். என் கணவர் சர்க்கரை நோயின் காரணமாக கடந்த 2013 ஆம் ஆண்டு இறந்துவிட்டார். அதன்பின்னர் மேற்படி உணவகத்தை நடத்தி வருகிறேன்.

மாலை 6.00 மணியிலிருந்து இரவு 11.30 மணி வரை எனது உணவகத்தில் வியாபாரம் நடைபெறும். ஆஜர் 1 ஆம் எதிரியை தெரியும். அவர் எனது மச்சாண்டார் பழனிவேல் என்பவரிடம் எனது கடையில் வந்து பேசிக்கொண்டிருப்பார். பழனிவேல் எனது உணவகத்தில் சைடுமாஸ்டராக வேலை செய்கிறார். விஜயன் என்பவர் இறந்ததிற்கு 2, 3 தினங்களுக்கு பின்னர் ஆட்டையாம்பட்டி காவல்நிலைய ஆய்வாளர்

வரச்சொன்னதின் பேரில் நான் மேற்படி காவல்நிலையம் சென்றேன். அங்கு வைத்து ஆய்வாளர் என்னிடம் விஜயன் மற்றும் 1ஆம் எதிரி ஆகியோரது செய்திதாள்களில் பிரசுரிக்கப்பட்ட புகைப்படங்களை காண்பித்து அவர்கள் யார் என்று தெரியுமா என்று விசாரித்தார். 1ஆம் எதிரியை மட்டும் தெரியும் என்று சொன்னேன். அவர் 5, 6 பேருடன் கொலை நடந்த அன்று இரவு எனது உணவகத்திற்கு சாப்பிடுவதற்கு வந்தாரா எ்ன்று ஆய்வாளர் என்னை கேட்டார். நான் பார்க்கவில்லை என்று சொல்லிவிட்டேன்.

அதன் பின்னர் 2முறை காவல்நிலையத்திற்கு விசாரணைக்கு அழைத்தார்கள். வேறு எதுவும் தெரியாது.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி கு.வி.செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொணடதற்கிணங்க அனுமதி வழங்கப்பட்டது)

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

போலிசர் என்னை விசாரித்த போது 01.09.2014 அன்று இரவு 7 மணியிலிருந்து 8 மணிக்குள்ளாக 1ஆம் எதிரி அவருடன் அடிக்கடி வந்து செல்லும் நான்கு நபர்களை கூட்டிவந்து, எனது உணவகத்தில் சாப்பிட்டு விட்டு ஏதோ பேசிக்கொண்டிருந்துவிட்டு, சென்றார் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. கொலை நடந்ததாக சொல்லப்படும் இடமானது எனது உணவத்திற்கு பின்புறம் தொலைவில் அமைந்துள்ளது.

விஜயன் கொலை செய்யப்பட்ட விவரம் 02.09.2014 அன்றே எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. 11.11.2014 அன்று 1ஆம் எதிரி இந்த கொலை வழக்கு சம்மந்தமாக நீதிமன்றத்தில் சரணடைந்தது எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. 1ஆம் எதிரி எனக்கு வேண்டப்பட்டவர் என்பதால் அவரை வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக உண்மை சங்கதிகளை மறைத்து பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

<u>1ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

விஜயன் கொலை செய்யப்பட்ட இடத்திற்கு நான் இப்போது வரை போனதில்லை. கொலை நடந்த இடத்தில் வைத்து போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.

Sd/- **G. Sri Rama Jeyam,**
III Additional District Judge,
Salem.